
17.11.2017

தினமலர்

# புதிய உச்சத்தை தொட்டது முட்டை விலை



**நாமக்கல்:** முட்டை விற்பனையில், முதல் முறையாக, கொள்முதல் விலை, ரூ.5.16 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## புதிய உச்சம்:

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்தில், ரூ.4.74 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை, 42 காசுகள் உயர்த்தி, ரூ.5.16 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. முட்டை வரலாற்றில், இதுவே அதிகபட்ச விலையாகும். சென்னையில், ரூ.5.45 காசாக உள்ளது.

## சில்லறை விற்பனை ரூ.6.50

முட்டை உற்பத்தி குறைந்து கொண்டே வருவதால், அதன் விலை அதிகரித்து வருவதாக பண்ணையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொள்முதல் விலை

அதிகரிப்பால் பெரும்பாலான நகரங்களில் முட்டையின் சில்லறை விற்பனை விலை ரூ.6.50 ஆக விற்பனை செய்யப்படுகிறது.

## முட்டை விலை 42 காசு உயர்வு

நாமக்கல்முட்டை விற்பனையில் :, முதல் முறையாக, கொள்முதல் விலை, 516 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுநாமக்கல்லில் ., தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று நடந்ததுமுட்டை உற்பத்தி ., விற்பனை நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர்அதையடுத்து ., 474 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை, 42 காசு உயர்த்தி, 516 காசாக நிர்ணயம் செய்யப்பட்டதுஇது ., முட்டை வரலாற்றில், நாமக்கல் மண்டலத்தின் அதிகபட்ச விலையாகும்சென்னையில் ., 545 காசாக உள்ளது.

இது குறித்து, தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளன நிர்வாகி கூறியதாவது:

தொடர் மழையால், தமிழகத்தில், முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது வெளிநாடுகளுக்கு . முட்டை ஏற்றுமதி நிறுத்தம், தேவை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால், முட்டை கொள்முதல் விலை உயர்ந்து வருகிறதுமுட்டை வரலாற்றில் ., இதுவே அதிக பட்சவிலைஒரே நாளில் ., 42 காசு உயர்த்தப்பட்டுஉள்ளது, பண்ணையாளர்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

தினமணி

## மேட்டூர் அணையில் இன்று முதல் தண்ணீர் திறப்பு

மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு வெள்ளிக்கிழமை முதல் 13 நாள்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

மேட்டூர் அணையில் இருந்து கால்வாய் பாசனத்துக்காக 64 -ஆவது ஆண்டாக வெள்ளிக்கிழமை தண்ணீர் திறக்கப்படுகிறது. பாசனத்துக்கான கால்வாய் மதகுகளை காலை 9.30 மணியளவில் தமிழக அமைச்சர்கள் கருப்பணன், பி.தங்கமணி ஆகியோர்

திறந்து வைக்கின்றனர். இந்தப் பாசனத்தின் வாயிலாக சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1 -ஆம் தேதி முதல் டிசம்பர் 15 -ஆம் தேதி வரை 137 நாள்களுக்கு கால்வாய் பாசனத்துக்குத் தண்ணீர் திறப்பது வழக்கம். இதற்கு 9.6 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும். பாசனப் பகுதிகளில் மழை பெய்தால், பாசனத் தேவை குறையும்.

இந்த நிலையில், கடந்த ஆகஸ்ட் 1 -ஆம் தேதி அணையின் நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாத காரணத்தால், கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

## பாசனத்துக்கு நீர் திறக்க முதல்வர் உத்தரவு

அணைகள், நீர்த்தேக்கங்களில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விட முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து, அவர் வியாழக்கிழமை வெளியிட்ட உத்தரவு:

திருநெல்வேலி மாவட்டம் நம்பியாறு நீர்த்தேக்கத்தில் இருந்து வெள்ளிக்கிழமை (நவ. 17) முதல் தண்ணீர் திறந்து விடப்படும். இதனால், 1744.55 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

திண்டுக்கல் மாவட்டம் பாலாறு பொருந்தலாறு அணையில் இருந்து பழைய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு பாசனத்துக்காக சனிக்கிழமை ( நவ. 18) முதல் நீர் திறந்து விடப்படும். இதனால், 6 ஆயிரத்து 168 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

பழனி வட்டம் வரதமாநதி அணையில் இருந்து ஆயக்குடி பாப்பன் வாய்க்கால், பெரிய வாய்க்கால் மற்றும் பழனி வாய்க்கால்களில் சனிக்கிழமை (நவ.18) நீர் திறந்து விடப்படும். இதனால், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 1,545 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

தி இந்து
தமிழால் இணைவோம்

# தமிழகம், புதுவையில் சில இடங்களில் மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் தகவல்



வெப்பச் சலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று ஒருசில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று வடக்கு நோக்கி நகர்ந்ததால் தமிழகத்தில் கடந்த இரு நாட்களாக மழை குறைந்து வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் தமிழகத்துக்கான மழை வாய்ப்புகள் குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகளிடம் கேட்டபோது, அவர்கள் கூறியதாவது:

**படிப்படியாக வலுவிழக்கும்**

வடக்கு நோக்கி நகர்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது விசாகப்பட்டினத்துக்கு கிழக்கே சுமார் 110 கிமீ தொலைவில் நிலைகொண்டுள்ளது. இது, வடக்கு ஆந்திரா மற்றும் ஒடிசா கடலோரப் பகுதிக்கு இடையே கரையைக் கடக்க உள்ளது. அதனைத் தொடர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலம் படிப்படியாக வலுவிழக்கும்.

இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் தமிழக கடலோரப் பகுதியில் இருந்த ஈரப்பதம் முழுவதும் ஆந்திரா நோக்கி ஈர்க்கப்பட்டுவிட்டது. அதனால் தற்போது தமிழக கடலோரப் பகுதியில் ஈரப்பதமே இல்லை. இனிமேல் புதிதாக உருவான பிறகே தமிழகத்துக்கு நல்ல மழை கிடைக்கும். அடுத்து வரும் 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வெப்பச் சலனம் காரணமாக ஒருசில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையில், வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யும்.

**காவேரிப்பாக்கத்தில் 4 செமீ.**

இதற்கிடையில், வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கத்தில் 4 செமீ, திருவள்ளூர் மாவட்டம் பூண்டி, கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை, விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் ஆகிய பகுதிகளில் தலா 3 செமீ, வேலூர் மாவட்டம் திருப்பத்தூர், விழுப்புரம் மாவட்டம் மயிலம், கடலூர் ஆகிய இடங்களில் தலா 2 செமீ, தருமபுரி மாவட்டம் அரூர், திருவண்ணாமலை மாவட்டம் செங்கம், கிருஷ்ணகிரி மாவட்டம் பெனுகொண்டபுரம், திருவள்ளூர் ஆகிய இடங்களில் தலா 1 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.